# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) - 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## BBA / COM 37 (II) – TAXATION

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. வரையறுத்த ABC லங்கா நிறுவனம் பின்வரும் தகவல்களை உமக்கு வழங்குகின்றது. இக்கம்பனி VAT வரிக்கு தம்மை பதிவுசெய்து கொள்ளவில்லை. இக்கம்பனியினால் செலுத்த வேண்டிய வருமான வரியை வரிமதிப்பு ஆண்டு 2007 / 08 இனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடுமாறு வேண்டப்படுகின்றீர்.

**2007 / 2008 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு**

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 2,500,000 | மொத்த இலாபம் | 17,800,000 |
| மின்சாரம் | 750,000 | வேன் விற்பனை இலாபம் | 250,000 |
| திருத்தச் செலவினம் | 525,000 | பெற்ற பங்கிலாபம் | 525,000 |
| ஊழியர் சேமலாபநிதி | 300,000 | வட்டி வருமானம்- | |
| வீதவரி | 125,000 | வட்டி (U.S $) | 2,850,000 |
| தளபாட விற்பனை நட்டம் | 225,000 | வட்டி HNB (தேறியது) | 450,000 |
| பொறி விற்பனை நட்டம் | 175,000 | இலங்கை வங்கி வட்டி | 180,000 |
| நீர்க் கட்டணம் | 650,000 | | |
| விளம்பரங்கள் | 325,000 | பெற்ற வாடகை- | |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு | 580,000 | (R/A- Rs.250000 rate 30%) | 425,000 |
| முகாமைக்கட்டணம் | 1,250,000 | | |
| ஒப்பந்த செலவினம் | 350,000 | | |
| இறைகள் | 300,000 | | |
| நன்கொடைகள் | 1,100,000 | | |
| சட்டச்செலவினங்கள் | 350,000 | | |
| அ.மு. கடன் ஏற்பாடு | 315,000 | | |
| மோட்டார் வாகனத் திருத்தம் | 450,000 | | |
| கொடுத்த வாடகை | 575,000 | | |
| மோட்டார் கோச் போக்குவரத்துச் செலவு | 475,000 | | |
| மொ.வி.வரி செலுத்தியது | 225,000 | | |
| மொ.வி.வரி செலுத்தவேண்டியது | 75,000 | | |
| உற்பத்தி அனுமதிப்பத்திரக் கட்டணம் | 100,000 | | |
| பொழுதுபோக்குச் செலவினம் | 200,000 | | |
| போக்குவரத்துச் செலவினம் | 650,000 | | |
| செலுத்திய பங்கிலாபம் | 650,000 | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 345,000 | | |
| வரிக்கான ஏற்பாடு | 400,000 | | |
| பொது ஒதுக்க ஏற்பாடு | 500,000 | | |
| தேறிய இலாபம் | 8,015,000 | | |
| | 22,480,000 | | 22,480,000 |

| நிலையான சொத்துக்கள் | மீதி 01-04-2007 | சேர்ப்பனவு | விற்பனை | 31-03-2008 |
|---|---|---|---|---|
| காணி, கட்டிடங்கள் | 4,500,000 | 850,000 | - | 5,350,000 |
| தளபாடங்கள் | 1,800,000 | 800,000 | 900,000 | 1,700,000 |
| பொருத்துக்கள் | 2,200,000 | 300,000 | - | 2,500,000 |
| பொறி | 4,500,000 | 900,000 | 1,000,000 | 4,400,000 |
| இயந்திரங்கள் | 1,200,000 | - | - | 1,200,000 |
| மோட்டார் வாகனங்கள் | 9,000,000 | 1,500,000 | 1,000,000 | 9,500,000 |
| கணனிகள் | 1,500,000 | 300,000 | - | 1,800,000 |
| **மொத்தம்** | **24,700,000** | **4,650,000** | **2900,000** | **26,450,000** |

**பெறுமானத்தேய்வு ஏற்பாடு**

| | | | | |
|---|---|---|---|---|
| காணி, கட்டிடங்கள் | 500,000 | 50,000 | - | 550,000 |
| தளபாடங்கள் | 800,000 | 80,000 | 200,000 | 680,000 |
| பொருத்துக்கள் | 600,000 | 100,000 | - | 700,000 |
| பொறி | 1,000,000 | 100,000 | 375,000 | 725,000 |
| இயந்திரங்கள் | 300,000 | - | - | 300,000 |
| மோட்டார் வாகனங்கள் | 920,000 | 200,000 | 450,000 | 670,000 |
| கணனிகள் | 150,000 | 50,000 | - | 200,000 |
| மொத்தம் | **4,270,000** | **580,000** | **1,025,000** | **3,825,000** |

(a). சிற்றூழியர்களின் ஓய்வறைக்காக கம்பனி ஒரு கட்டடத்தை 01.01.2008 இல் கட்டியுள்ளது. மீதிக் கட்டடங்களின் விபரம் வருமாறு

| | திகதி | கிரயம் (ரூபா) |
|---|---|---|
| கொள்வனவு | 15/05/2000 | 1,800,000 |
| கட்டப்பட்டது | 01/06/2002 | 2,700,000 |
| மீதி | 01/04/2007 | 4,500,000 |

(b). 10.05.2004 இல் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களில் பாவனைக்கு உதவாதவைகளை விற்பனை செய்து, அவற்றிற்குப் பதிலாக புதிய தளபாடங்களை 01.06.2007 இல் கொள்வனவு செய்து, இதன்போது பெறுமதி சேர் வரியாக செலுத்திய ரூபா 200,000 / - கணக்குகளில் இடம்பெறவில்லை. மீதித் தளபாடங்களின் விபரம் வருமாறு

| | திகதி | கிரயம் |
|---|---|---|
| கொள்வனவு | 10/05/2000 | 500,000 (VAT Rs.200,000/- உள்ளடங்கலாக) |
| கொள்வனவு | 10/05/2004 | 900,000 (VAT Rs. 180,000/- உள்ளடங்கலாக) |
| கொள்வனவு | 10/05/2005 | 400,000 (VAT Rs. 100,000/- உள்ளடங்கலாக) |
| மீதி | 01/04/2007 | 1,800,000 |

(c). 01.07.2007 இல் கம்பனியானது 15.07.2003 இல் கொள்வனவு செய்த பெற்றோல் காரினை விற்பனை செய்து புதிய டீசல் கார் ஒன்றினை 15.03.2008 இல் கொள்வனவு செய்து அதே நிறைவேற்று அதிகாரியின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றது.

இக்கொள்வனவின்போது கம்பனி செலுத்திய 12.5 % VAT கார் கணக்குகளில் இடம்பெறவில்லை. ஏனைய மோட்டார் வாகனங்களின் விபரம் வருமாறு.

| | திகதி | கிரயம் |
|---|---|---|
| கொள்வனவு | 10/05/2000 | 2,200,000 (VAT 20% - உள்ளடங்கலாக) |
| கொள்வனவு | 15/07/2003 | 3,000,000 (VAT 20% - உள்ளடங்கலாக) |
| கொள்வனவு | 10/07/2005 | 3,800,000 (VAT 12.5% - உள்ளடங்கலாக) |
| மீதி | 01/04/2007 | 9,000,000 |

(d). 01.05.2006 இல் கொள்வனவு செய்த பொறிகளை குறித்த ஆண்டு காலத்தின்போது கம்பனி விற்பனை செய்துள்ளது. ஏனைய பொறிகளின் விபரம் வருமாறு

| | திகதி | கிரயம் |
|---|---|---|
| கொள்வனவு | 15/04/2000 | 1,500,000 (VAT 12.5% உள்ளடங்கலாக) |
| கொள்வனவு | 15/06/2002 | 1,000,000 (VAT 20% உள்ளடங்கலாக) |
| கொள்வனவு | 01/05/2006 | 2,000,000 (VAT 20% உள்ளடங்கலாக) |
| மீதி | 01/04/2007 | 4,500,000 |

(e). சம்பளக் கொடுப்பனவு உள்ளடங்கலாக முழு நிருவாக செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தக்கூடிய அனுமதிப்பத்திரமுள்ள Software Package ஒன்றினை ரூபா 300,000 /- இற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(f). கம்பனி குறித்த ஆண்டு காலத்தில் குளிரூட்டிகளையும், காற்றாடிகளையும் கொள்வனது செய்துள்ளது. இவை 12.5 % VAT உள்ளடங்கலாக இருப்பதுடன் கம்பனியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(g). சம்பளமும் கூலிகளும் கணக்கில் ரூபா 200,000/- பழைய பொறியை அகற்றி, புதிய பொறியை நிறுவுவதற்காக ஏற்பட்டதாகும். மேலும் ரூபா 50,000/- குளிரூட்டிகளையும், காற்றாடிகளையும் பொருத்துவதற்காக செலுத்தப்பட்ட கூலியாகும்.

(h). மின்சாரக் கட்டணக் கணக்கில் ரூபா 40,000/- நிறைவேற்று அதிகாரியின் வதிவிடத்துடன் தொடர்பான மின்சாரக் கட்டணமாகும்.

(i). கம்பனி வாடகைக்கு கொடுத்த வீடு தொடர்பாக ஏற்பட்ட வீதவரி, திருத்தச் செலவுகள் என்பன வீதவரி, திருத்தச் செலவுகள் கணக்குகளில் இடம்பெற்றுள்ளன.

(j). விளம்பரச் செலவுகளின் விபரம் வருமாறு

| | ரூபா |
|---|---|
| பாவித்த பொருட்களின் விற்பனை தொடர்பான விளம்பரம் | 10,000 |
| பொதுமக்கள் நல்லுறவு திரைப்படக் காட்சி | 15,000 |
| கலண்டர், டயரி நன்கொடைகள் | 150,000 |
| வர்த்தக விளம்பரங்கள் | 150,000 |
| மொத்தம் | 325,000 |

(k). சட்டச் செலவினங்களின் விபரம் வருமாறு

| | Rs. |
|---|---|
| கடன்பட்டோரிடம் கடனை மீளப்பெறல் | 40,000 |
| சொத்துக்களின் உரிமையை பாதுகாப்பது தொடர்பானது | 80,000 |
| ஊழியர் பிணக்கு விசாரணை | 50,000 |
| வரிமேன்முறையீடு வழக்கு | 60,000 |
| காலதாமதமான பதிவுத் தண்டப்பணம் | 80,000 |
| வியாபார உரிமையை பங்கிடுவது தொடர்பானது | 40,000 |
| மொத்தம் | 350,000 |

(l). நிறைவேற்று அதிகாரிக்கு கொழும்பில் வீடொன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த வீட்டின் தேறிய ஆண்டுப் பெறுமதி ரூபா 150,000 /- (வீத வரி 30%) ஆகும். கம்பனி வீட்டுச் சொந்தக்காறர்களுக்கு ரூபா 250,000/- வருடாந்த வாடகையாக செலுத்தும் அதேவேளை நிறைவேற்று அதிகாரி ரூபா 8,000/- மாதாந்த வாடகையாக கம்பனிக்குச் செலுத்துகின்றார். இக்கொடுக்கல் வாங்கல் வாடகைக் கணக்கில் இடம்பெற்றுள்ளது.

(m)

அறவிட முடியா ஏற்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| கடன்பட்டோர் | 250,000 | மீதி பொது | 50,000 |
| மீதி | | -விசேடம் | 60,000 |
| -பொது | 155,000 | -கெலும் | 140,000 |
| -விசேடம் கெலும் | 140,000 | -டயஸ் | 35,000 |
| -பெரேரா | 155,000 | இ/ந க/கு | 315,000 |
| | | காசு | 100,000 |
| | 700,000 | | 700,000 |

(n). பிரயாணச் செலவினங்களின் விபரம் வருமாறு

| | ரூபா |
|---|---|
| வெளிநாடு: | |
| உற்பத்தி முகாமையாளரின் விடுமுறை களிப்பு | 350,000 |
| உள்நாடு: வர்த்தக பிரயாணங்கள் | 300,000 |
| மொத்தம் | 650,000 |

(o). இலங்கை இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளாத நாடு ஒன்றில் இருந்து கிடைத்த தேறிய வட்டி வருமானம் 5 % வரி கழித்து பெறப்பட்டுள்ளது.

(p). நன்கொடைகளின் விபரம் வருமாறு

| | ரூபா |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட தர்மஸ்தாபனம் (பால் பக்கட்) | 200,000 |
| இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் | 400,000 |
| பாதுகாப்பு அமைச்சு | 300,000 |
| அரசாங்க அபிவிருத்தித் திட்டம் | 200,000 |
| மொத்தம் | 1,100,000 |

(50 புள்ளிகள்)

02. திரு பெரேரா என்பவர் வரையறுத்த மேக்கண்டைல் எக்ஸ்போட் நிறுவனத்தில் வேலை செய்கின்றார். அவரின் ஜுலை மாத சம்பளப் பற்றுச் சீட்டுடன் இணைத்து பின்வரும் தகவல்களை ஒப்படைக்கின்றார். அவர் வரிமதிப்பு ஆண்டு 2007 / 2008 க்கு செலுத்த வேண்டிய வருமான வரியைக் கணிப்பிடுமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

Mercantile export (Ltd) July-2007
Employee No: AAT-212
Name: Mr. M.M.Perera
Designation: Senior Marketing Manager
Department: Marketing
EPF No: Xr00035

| வருமானங்கள் | Rs. | | Rs. |
|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 80,000 | பொழுதுபோக்கு கொடுப் | 20,000 |
| விற்பனைத் தரகு | 16,000 | பிரயாணக் கொடுப்பனவு | 20,000 |
| கைத்தொலைபேசி கொடுப் | 5,000 | விசேட கொடுப்பனவு | 10,000 |
| உபகாரப் பணம் | 12,000 | மருத்துவக் கொடுப்பனவு | 10,000 |
| சம்பள நிலுவை 2002/2003 | 25,000 | | |
| மொத்தக் கொடுப்பனவு | | | 198,000 |
| கழிவுகள் | | | |
| சஞ்சிகை – சந்தாப்பணம் | 1,000 | நலன்புரிச் சபை | 500 |
| இடர்கடன் | 5,000 | இடர் கடன் வட்டி | 1,200 |
| வாகனக் கடன் | 10,000 | வாகனக் கடன் வட்டி | 1,500 |
| சேமலாபநிதிக் கடன் | 10,000 | சேமலாபநிதி வட்டி | 1,000 |
| சேமலாபநிதிப் பங்களிப்பு | 6,400 | விழா முற்பணம் | 4,600 |
| வீடமைப்புக் கடன் | 15,000 | வீடமைப்புக் கடன் வட்டி | 3,500 |
| சம்பள முற்பணம் | 20,000 | முத்திரை வரி | 100 |
| ஆயட் காப்புறுதி | 10,800 | | |
| மொத்தக் கழிப்பனவுகள் | | | 90,600 |
| தேறிய கொடுப்பனவு | 107,400 | | |
| 25-07-2007 | | | |

இவற்றிற்கு மேலதிகமாக திரு. பெரேரா அவரது மனைவியும் அவர் நண்பியும் இணைந்து நடாத்தும் பங்குடைமை வியாபாரத்தில் ஆலோசகராகப் பணிபுரிகின்றார். அந்த பங்குடைமை வியாபாரத்தில் இருந்து ரூபா 15,000/- இனை மாதாந்த ஆலோசனைக் கட்டணமாகப் பெறுகின்றார்.

மேலும் அவரது சம்பளத்திற்கும் ஏனைய வருமானங்களங்களுக்கும் அப்பால், அவருக்கு வீடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த வீட்டின் ஆண்டுப் பெறுமதி ரூபா 180,000/- (வீதவரி 30 %) ஆகும். கம்பனி வீட்டுச் சொந்தக்காறனுக்கு ரூபா 20,000 /- மாதமொன்றுக்கு செலுத்துகின்றது. திரு. பெரேரா கம்பனிக்கு ரூபா 8,000/- மாதாந்த வாடகையாக செலுத்துகின்றார்.

அவருக்கு கொழும்பில் இரண்டு வீடுகள் உள்ளன. முதலாவது வீட்டினை 1997 இல் ரூபா 35,00,000 /- கிரயத்தில் கட்டி முடித்தார். இதன் தளப்பரப்பு 2500 சதுர அடிகளாகும். தேறிய ஆண்டுப் பெறுமதி ரூபா 120,000/- ஆகும். இந்த வீட்டின் வாடகை வருமானம் மாதாந்தம் ரூபா 35,000/- ஆகும். குடியிருப்பவர் திருத்த வேலையைப் பொறுப்பேற்பார். 2005 இல் ரூபா 72,00,000 /- கிரயத்தில் கட்டி முடித்த ரூபா 180,000/- ஆண்டுப் பெறுமதி கொண்ட மற்றைய வீட்டின் வாடகை வருமானம் மாதமொன்றுக்கு ரூபா 40,000/- ஆகும். இந்த வீட்டின் தளப்பரப்பு 3000 சதுர அடிகளாகும். திரு. பெரேரா திருத்தங்கள், வீதவரி என்பவற்றைப் பொறுப்பேற்பார். அவரின் வட்டி வருமானங்கள் வருமாறு

| | Rs. |
|---|---|
| BOC | 75,000 |
| HNB | 25,000 |
| NSB | 24,000 |

திரு. பெரேராவின் பங்குலாப வருமானங்கள் விபரம் வருமாறு

| | | Rs. |
|---|---|---|
| AB Ltd | | |
| இன் இலாபத்திலிருந்து | 75,000 | |
| வரி விலக்களிக்கப்பட்ட திட்டம் | 15,000 | 90,000 (தேறியது) |
| விலைகூறப்பட்ட கம்பனி | | 50,000 |
| மொத்தம் | | 140,000 |

அவர் விவசாய முயற்சிகளில் ஈடுபடுகின்றார். 1990 ம் ஆண்டு பிறந்த அவரின் மகன் இத்திட்டத்தில் பகுதியளவில் பணிபுரிகின்றார். அதற்காக அவரின் மகன் ரூபா 20,000/- மாதாந்த சம்பளமாகப் இத்திட்டத்தில் பெற்றுக்கொள்கின்றார். இத்திட்டத்தின் ஏனைய விபரங்கள் வருமாறு.

| | | Rs. |
|---|---|---|
| மொத்த வருமானம். | | 2,500,000 |
| கழி: செலவுகள் | | |
| சம்பளம் | 300,000 | |
| நிலத்தைத் துப்பரவு செய்தல் | 250,000 | |
| சதுப்பு நிலத்தை நிரப்புதல் | 300,000 | |
| கட்டுமானச் செலவுகள் | 500,000 | |
| நீர்விநியோகமும் மின்சாரமும் | 250,000 | |
| இணைப்புப் பாதை | 400,000 | |
| இளம் தாவரக் கொள்வனவுகள் | 200,000 | |
| முன்கொண்டுவந்த நட்டம் | 500,000 | |
| உரமானியம் | | 100,000 |

அவர் பின்வருவனவற்றை கழிவீட்டுக்காகக் கோருகின்றார்.

| | ரூபா |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட கம்பனி முதலீடு | 600,000 |
| வயோதிபர் இல்ல நன்கொடை | 25,000 |
| ஆயுட் காப்புறுதி | 30,000 |
| இடம்பெயர்ந்த மக்களுக்கு அரிசி நன்கொடை | 500,000 |

(35 புள்ளிகள்)

03. ஏதாவது ஒரு வருடத்தில் வரி செலுத்தவேண்டும் எனக் கருதப்படும் நபர் ஒருவர் தனது வருமானக் கோவையை தொடர்ந்து வரும் 30 செப்டம்பர் மாதத்திற்குள் அனுப்பி வைக்குமாறு அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவில் வேண்டப்படுகின்றார்.

வருமானவரிக்கோவை (return), வருமான வரி மதிப்பீடு (Assessment) என்றால் என்ன என விளக்குக..

(15 புள்ளிகள்)

***